குழந்தைகளுக்கு வேதாகமம்
வழங்குபவர்

# ஏமாற்றுக்காரனாகிய யாக்கோபு



எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: M. Maillot; Lazarus

தழுவியவர்: M. Kerr; Sarah S.

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2014 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.



தேவன் உங்களுடைய
குடும்பத்துக்கு
எப்போதாவது ஒரு
குழந்தையை
அனுப்பியிருக்கிறாரா?
எவ்வளவு
உற்சாகமாயிருக்கும்!



ஈசாக்கும் ரெபெக்காளும்
இரட்டிப்பான
சந்தோஷத்துடன்
இருந்திருப்பார்கள்.
ஏனெனில் தேவன்
அவர்களுக்கு இரட்டைக்
குழந்தைகளை
கொடுக்கப்போகிறார்.



குழந்தைகள்
ரெபெக்காளின்
வயிற்றுக்குள் க
ஷ்டப்பட்டிருப்பார்கள்.
அவள் ஜெபித்தபோது
தேவன் சொன்னார் -
உன்னுடைய இரண்டு
குழந்தைகளும் இரண்டு
தேசமாக மாறுவார்கள்.

இளையவனோ
பெரியவனாயிருப்பான்.
சாதாரணமாக
முதற்குழந்தை
பெரியவனாயிருக்கும்.
கடைசியாக
குழந்தைகள்
பிறந்தன.



இரட்டைக் குழந்தைகள் ஒன்றுபோல் இருக்கவில்லை. ஏசா மூத்த குமாரன், அதிக ரோமமுள்ளவன் ஒரு திறமையான வேட்டைக்காரனாய் வளர்ந்தான்.



யாக்கோபுவோ மென்மையான தோலுடையவனாய் வீட்டை சுற்றிலும் வேலை செய்ய ஆசைப்பட்டான். ஏசா தகப்பனாகிய ஈசாக்கை வெகுவாக நேசித்தான். தாயோ இளையவனை விரும்பினாள்.



ஒரு நாள் ஏசாவுக்கு பசி உண்டாயிற்று, யாக்கோபினிடத்தில் எனக்கு "உணவு கொடு" என்றான். யாக்கோபு உன்னுடைய "சேஷ்டபுத்திர பாக்கியத்தை எனக்கு விற்றுவிடு" என்றான்.



தேவன் முதற்பிள்ளைகளுக்கு கொடுக்கும் ஆசீர்வாதத்தைப்பற்றி கவலைப்படவில்லை, ஏசா யாக்கோபோடு பேரம் பேசிக்கொண்டான். தகப்பன் இறந்த பின் குடும்பத்தை யாக்கோபு வழி நடத்தி செல்வான்.



ஒரு இரவு தேவன் ஈசாக்கினிடத்தில் பேசினார்.
"உன் தகப்பனாகிய ஆபிரகாமுடைய தேவன் நான். நான் உன்னோடுயிருக்கிறேன். உன்னுடைய சந்ததியை ஆசீர்வதிப்பேன்".



ஈசாக்கு தேவனை வழிபட்டாலும், அவனுடைய குமாரனாகிய ஏசா தேவனைப் பற்றி கவலைப்படாத ஏத்திய தேசத்து இரண்டு பெண்களை மனைவியாக கொண்டான்.





ஈசாக்கு முதிர்வயதுள்ளவனான். ஏசாவை பார்த்து, "நீ எனக்கு ருசியுள்ள பதார்த்தங்களை கொண்டுவா. நான் உன்னை ஆசீர்வதிப்பேன்" என்றான்.



இந்த விசேஷமான ஆசீர்வாதம் தகப்பனால் முதற்குமாரனுக்கு கொடுக்கப்படுகிறது. ஏசா துரிதமாக வேட்டைக்குச்சென்றான். ஆனால் ரெபெக்காள் இதை கேட்டுவிட்டாள். அவளோ யாக்கோபு ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்று ஆசைப்பட்டாள்.



ரெபெக்காளிடம் ஒரு திட்டம் இருந்தது. ரெபெக்காள் ஒருபுறம் ஈசாக்குக்கு ருசியான பதார்த்தங்களை துரிதமாக சமைக்க, யாக்கோபு ஏசாவுடைய ஆடைகளையும் , ஆட்டுக்குட்டிகளின் மயிர் நிறைந்த தோலையும் அவன் கையிலும், தோளிலும் போட்டாள். ஈசாக்குக்கு சரியான கண்பார்வையில்லை. ஆகையால் அவனை அவர்கள் ஏமாற்றமுடியும்.

யாக்கோபு உணவை
ஈசாக்கினிடத்தில்
கொண்டுவந்தான். உன்
சத்தம் யாக்கோபை போலவும்,
உன் கை ஏசாவை போலவும்
உணருகிறேன் என்று ஈசாக்கு
சொன்னான். சமைத்த உணவை
அருந்திய பின் தன் முன்னால்
முழங்காற்படியிட்ட
யாக்கோபை
ஆசீர்வதித்தான்.



யாக்கோபு புறப்பட்டு போனபின், ஏசா வந்தான். "இதோ உங்களுக்கான ருசியான பதார்த்தம்" என்றான்.



ஈசாக்குக்கு தான் ஏமாற்றப்பட்டது தெரிந்தது. "என்னுடைய ஆசீர்வாதங்களை மாற்றமுடியாது" என்று அழுதான். ஏசாவின் இருதயம் வெறுப்பினால் நிறைந்தது. ஏசா யாக்கோபை கொன்றுவிட நினைத்தான்.

ஏசாவின் அச்சுறுத்தல்களை ரெபெக்காள் கேட்டாள். அவள் யாக்கோபிடம், "நீ உன்னுடைய மாமாவின் வீட்டிற்கு போய்விடு". நீ உன் சகோதரனுக்கு செய்ததை அவன் மறக்கும் வரை அங்கேயிரு என்று சொன்னாள்.





ஈசாக்கும், யாக்கோபு
அவனுடைய தாயின் வீட்டில்
மனைவியை தேடவேண்டும்
என்று சம்மதித்தான்.
ஆகையால் யாக்கோபு
வீட்டை விட்டு சென்றான்.

அந்த இரவிலே,
யாக்கோபு இரவு
நேரமானபோது
தூங்குவதற்காக ஒரு
கல்லை எடுத்து,
தலையின் கீழ் வைத்து
படுத்துக்கொண்டான்.



ஒரு வேளை தனிமையாக
இருப்பதை உணர்ந்திருக்கலாம்,
பயந்திருக்கலாம். ஆனால்
அவன் தனிமையாகயில்லை.
தேவன் அற்புதமான
முறையில் அவனுடன்
சொப்பனத்தின்
மூலம் பேசினார்.





"நான் உன்னுடைய தகப்பனாகிய ஆபிரகாம்
மற்றும் ஈசாக்கின் தேவன். நான் உன்னோடு இருப்பேன்.
இந்த தேசத்தை உனக்கு கொடுப்பேன், உன் குடும்பத்தின்
மூலமாக உலகத்தின் குடும்பங்கள் எல்லாம்
ஆசீர்வதிக்கப்படும்." தேவன் பேசிய பின்பாக
யாக்கோபு விழித்துக்கொண்டான். அவன்
பயப்பட்டான்.

யாக்கோபின் மாமா
லாபான் அவனை வரவேற்று
உபசரித்தான். யாக்கோபு தன்
மாமாவின் மகளாகிய ராகேலை
நேசித்ததினாலே அவளை
திருமணம்



செய்ய ஏழுவருடம்
வேலை செய்தான்.

ஆனால், திருமணமான
இரவு, லாபான் யாக்கோபை
ஏமாற்றினான்.



"இவள் லேயாள், ராகேல் இல்லை," என்று யாக்கோபு குறைகூறினான். "நீர் என்னை ஏமாற்றினிர்" என்றான். லாபான் அவனிடம் "மூத்தமகள் முதலாவது திருமணம் செய்யப்படவேண்டும். ஆகையால் ராகேலுக்காக இன்னும் ஏழு வருடம் வேலை செய் என்றான்."



யாக்கோபு சம்மதித்தான். ஒரு வேளை தான் ஈசாக்கையும், ஏசாவையும் ஏமாற்றியதை நினைவு கூர்ந்திருக்கலாம்.



யாக்கோபுக்கு பதினோறு குமாரர்கள் இருந்தார்கள். பல வருடங்கள் சென்ற பின் தன் குடும்பத்தை கானான் தேசத்துக்கு கொண்டு செல்ல ஆசைப்பட்டான். அவனுடைய பெற்றோர் அங்கே இருந்தார்கள். அவனைக் கொலை செய்ய நினைக்கும் ஏசாவும் அங்கேதான் இருக்கிறான்.



ஆகையால் பாதுகாப்பாயிருக்குமா? ஒரு நாள் தேவன் நீ உன்னுடைய தேசத்திற்கு திரும்பிப்போ என்றார். யாக்கோபு தன்னுடைய குடும்பத்தையும், மந்தையையும் சேர்த்துக்கொண்டு வீட்டிற்கு செல்ல புறப்பட்டான்.



அந்தபிரயாணம்
எப்படியிருந்திருக்கும்,
ஏசா நானூறு மனிதருடன்
யாக்கோபை சந்திக்க
புறப்பட்டு வந்தான். ஆனால்
அவன் யாக்கோபுக்கு ஒரு
தீமையும் செய்யவில்லை.



அவன் ஓடி சென்று யாக்கோபை கட்டி அனைத்துக்கொண்டான். மறுபடியும், ஏசாவும் யாக்கோபும் நண்பர்களானார்கள். யாக்கோபு தன்னுடைய வீட்டிலே பாதுகாப்பாயிருந்தான்.



ஏமாற்றுக்காரனாகிய யாக்கோபு

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

ஆதியாகமம் 25 - 33

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16